(2) அறிக்கை அளித்தல்

சட்டவிதிகள் ஆய்வுக்குழுவின் அறிக்கையை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் சார்பாக, அக்குழுவின் அறிக்கையை திரு. ந. கணபதி சட்டப் பேரவைக்கு அளிப்பார்.

THIRU N. GANAPATHY : Mr. Deputy Speaker, Sir, on behalf of the Chairman, Committee on Subordinate Legislation, I present the Fifth Report (Fifth Assembly) of the Committee.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமை யாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : சட்டமன்ற துணைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவில் இருக்கிற நிலைகளையும் மொத்தமாக நடைபெற்று வருகின்ற நிலைகளைப் பற்றியும் நான் என்னுடைய கருத்தினைக் கூற விரும்புகிறேன்.